## சாதாரணக்கூட்டம்

2023–ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 28 –ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொருள் எண்.1**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் டிசம்பர்–2023 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண். 322 நாள். 28.12.2023**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

பள்ளிபாளையம் நகராட்சியில் டிசம்பர் மாதம் 23–ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | வரியின் விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 4.96 | 209.08 | 0.28 | 118.15 | 4.68 | 90.93 |
| 2. | காலியிட வரி | 2.78 | 4.01 | 2.78 | 3.58 | 0.00 | 0.43 |
| 3. | தொழில்வரி | 19.64 | 18.47 | 19.37 | 11.40 | 0.27 | 7.07 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 6.80 | 71.14 | 1.25 | 40.10 | 5.55 | 31.04 |
| 5 | வரியில்லா இனம் | 0.00 | 19.64 | 0.00 | 18.51 | 0.00 | 1.13 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.23 | 48.50 | 0.02 | 26.97 | 0.20 | 21.53 |
| | **மொத்தம்** | **34.41** | **370.84** | **23.7** | **218.71** | **10.70** | **152.13** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/சி1

**தீர்மான எண். 323 நாள். 28.12.2023**

பதிவுசெய்யப்பட்டது.

**<u>பொருள் எண்.3</u>**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகள் இரண்டாண்டு சாதனைகளை கீழ்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்கண்ட விபரப்படி விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழில்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலைமலர் (மலர் பப்ளிகேஷன்ஸ் லிமிடேட்) | 13.09.2023 | 15000.00 |
| 2 | காலைக்கதிர் (மகாலட்சுமி மீடியா பிரைவேட் லிமிடேட்) | 23.10.2023 | 10000.00 |
| 3 | கால் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் (தினகரன்) | 23.10.2023 | 9866.00 |
| 4 | தினத்தந்தி | 23.10.2023 | 9866.00 |
| 5 | தீக்கதிர் | 04.11.2023 | 9450.00 |
| | | **மொத்தம்** | **54182.00** |

அலுவலக குறிப்பு

மேற்கண்டவாறு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1980/2023/அ1

**தீர்மான எண். 324 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.4</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஈப்பு வாகனம் எண். TN 77 R 6798 ஏற்கனவே சர்வீஸ் செய்யப்பட்டு 10000 கிலோ மீட்டர் ஓடியுள்ளதால், வீல் அலைமெண்ட், வீல் பேலன்ஸ், முன்புற விளக்கு மற்றும் இதர சிறு பழுதுகள் சரிசெய்யப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்க்கு பழுது பணிகளை அங்கீகரிக்கப்பட்ட GOUNDER CAR STUDIOZ, பவானி நிறுவனத்தின் மூலம் சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.6000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1330/2023/இ1

**தீர்மான எண். 325 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.5</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டிற்கு உள்ள TN-77 R 6798 என்ற ஈப்பு வாகனத்திற்கு காப்பீடு 13.12.2023 முடிவடைகிறது என ஓட்டுனர் தெரிவித்ததின் பேரில் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டதில் காப்பீடு 13.12.2023 உடன் முடிவடைவதால் நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் வாகனத்தின் காப்பீட்டினை புதுப்பித்துக் கொள்ள செலவினம் ரூ.13,005/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து தொகை செலுத்தியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.822/2023/இ1

**தீர்மான எண். 326 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.6</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21335/2021/ நாள். 11.2023 சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம் பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் 19.12.2023ம் தேதி செவ்வாய் கிழமை தனியார் திருமண்டபத்தில் (G.V. மஹால்) நடைபெற்றதற்கு மின்கட்டணமாக ரூ.7,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1998/2023/இ1

**தீர்மான எண். 327 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.7</u>**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கென இருந்து வரும் ஈப்பு வாகனம் எண். TN-34 AC 6035 ல் பழுது ஏற்பட்டுள்ளதாக ஓட்டுநர் தெரிவித்துள்ளார். எனவே ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s.எஸ்.கே.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் மூலம் சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ. 26,411 /– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1742/2023/இ1

**தீர்மான எண். 328 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.8</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வரை உள்ள வார்டுகளில் மண்சாலையாக உள்ள சாலைகளை தார் / கான்கீரிட் சாலைகளாக தரம் உயர்த்தித் தர நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து மனு அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படி மண்சாலையாக உள்ள சாலைகளை மழைநீர் வடிகால் அமைத்து தார்சாலை / கான்கீரிட் சாலையாக தரம் உயர்த்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி வேண்டி கருத்துரு சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெருக்களின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | ஆரம்பப்பள்ளி பின்புறம் |
| 2 | | பங்களா தோட்டம் மூர்த்தி வீடு அருகில் |
| 3 | 2 | 2வது வீதி மற்றும் 3வது வீதி குறுக்கு சந்து |
| 4 | | 4வது வீதி மற்றும் 5வது வீதி குறுக்கு சந்து |
| 5 | 3 | தில்லை நகர் 18வது சாலை |
| 6 | | தில்லை நகர் விநாயகர் கோவில் மாம்பழத்தார் வீதி |
| 7 | 4 | அம்மா உணவகம் அருகில் கருணா மஹால் |
| 8 | 6 | கே.ஆர்.பி .ரோடு |
| 9 | | பெட்ரோல் பங்க் ரோடு |
| 10 | 7 | யுவராஜ் வீடு அருகில் வாய்க்கால் ரோடு |
| 11 | 9 | ரேஷன் கடை வீதி |
| 12 | 10 | பெரும்பாறைக்காடு |
| 13 | | VIP நகர் |
| 14 | | நேரு நகர் |
| 15 | 12 | தேவாங்கபுரம் |
| 16 | | நாராயணா நகர் கடைசி வீதி |
| 17 | 21 | பெரியகாடு |

அலுவலக குறிப்பு

மேற்கண்ட மண் சாலைகளை தார் / கான்கிரீட் சாலைகளை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2185/2023/இ1

**தீர்மான எண். 329 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.9</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளுக்கு புதிய மற்றும் பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 4 மின் மோட்டார்கள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 4 மின்மோட்டார்களை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார்கள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் 1 மின்பணியாளர் கொண்டு தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் தலைமை நீரேற்று நிலைய மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க கடினமானதாக உள்ளது. மேலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கவும், மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க தேவையான மின்பணியாளர்கள் 6 பேரை ஒப்பந்த முறையில் நியமித்திடவும், நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள பயோ கேஸ் பிளாண்டினை பராமரிக்க ஒப்பந்த முறையில் 3 பணியாளர்களை 6 மாத காலத்திற்கு நியமித்து பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.16,50,000/—ஐ குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.2157/2023/இ1

**தீர்மான எண். 330 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளிலும் உள்ள மொத்தம் 1393 தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் நிரந்தர மின்பணியாளர் ஒருவர் மட்டுமே பணியாற்றி வருவதால், அனைத்து தெருவிளக்குகளையும் பராமரிக்க இயலாமல் பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஒப்பந்த முறையில் இரண்டு மின் பணியாளர்களை நியமிக்கவும், நகராட்சிக்கு சொந்தமான மினி எர்த் மூவர் (JCB) வாகனத்தினை இயக்க ஒரு ஓட்டுநரை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு நியமித்து பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7,50,000/—ஐ பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.2149/2023/இ1

**தீர்மான எண். 331 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

பள்ளிபாளையம் நகராட்சியில் 7 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஒரே ஒரு குடிநீர் திறப்பாளர் பணியிடம் மட்டுமே உள்ள நிலையில், 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்க 6 மாத காலத்திற்கு ஒப்பந்த முறையில் பணியாளர்களை நியமித்து பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6,20,000/—ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1443/2023/இ1

**தீர்மான எண். 332 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து செல்லும் குழாய் பராமரிப்பு பணி, குடிநீர் பகிர்மானக் குழாய் பழுது பராமரிப்பு பணி, கழிப்பிடங்களில் உள்ள குழாய் பராமரிப்பு பணி போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் இல்லாத நிலையில், தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்சொன்ன பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். எனவே, ஆழ்துளைக் கிணறு மூலமாக தண்ணீர் விநியோகம் செய்ய பயன்படும் குழாய் பராமரிப்பு, கழிப்பிடக் குழாய், பகிர்மானக் குழாய் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த முறையில் 6 மாத காலத்திற்கு பணியாளர்களை நியமிக்க ஆகும் செலவினம் ரூ.15,00,000/—ஐ பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.2158/2023/இ1

**தீர்மான எண். 333 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21335/2021/ நாள். 11.2023 சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களுடன் முதல்வர் திட்டத்திற்கான முகாம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் மூன்று கட்டங்களாக மூன்று இடங்களில் அமைத்து, முகாமில் கலந்து கொள்ளும் அரசுத் துறை நிறுவனங்களுக்கான கணினிகள், அதற்கான பிரிண்டர்கள் மற்றும் வலைதள (Internet Facilities) வசதிகள் செய்திட ஆகும் செலவினம் ரூ.4,40,000/—ஐ பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1998/2023/இ1

**தீர்மான எண். 334 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21335/2021/ நாள். 11.2023 சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களுடன் முதல்வர் திட்டத்திற்கான முகாம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் மூன்று கட்டங்களாக முகாம் நடைபெறும் மூன்று இடங்களில் பொதுமக்களுக்கான தேவையான இருக்கை வசதிகள், சாமியான பந்தல், ஒலி அமைப்பு, மற்றும் தண்ணீர் வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.2,65,000/—ஐ பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1998/2023/இ1

**தீர்மான எண். 335 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 93 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் அல்லாத தண்ணீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்சொன்ன ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர்ரை மேலே ஏற்றுவதற்கு நீர்மூழ்கி மின்மோட்டார் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் மோட்டார்களை இயக்கி தண்ணீரை தொட்டிகளில் நிரப்பும் போது பல நேரங்களில் தொட்டிகள் முழுவதும் நிரம்பி தண்ணீர் வழிந்து வீணாக நேரிடுகிறது. எனவே இதனை தடுக்கும் பொருட்டு தொட்டிகள் நிரம்பியவுடன் தானாகவே மின்மோட்டார்கள் இயக்கத்தினை

நிறுத்துவதற்காக தானியாங்கி சுவிட்சுகளை முதற்கட்டமாக 20 தொட்டிகளில் வைப்பதற்கு ஆகும் செலவினம் ரூ.1,80,000/—ஐ குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.2567/2023/இ1

**தீர்மான எண். 336 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு பதிவறையில் கோப்புகளை அடுக்கி வைப்பதற்கு அலமாரி இல்லாத காரணத்தால் புதியதாக அலமாரி (Rack) வாங்குவதற்கு செலவினத் தொகை ரூ.26,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2202/2023/இ1

**தீர்மான எண். 337 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் எலந்தக்குட்டை கிராமத்தில் நகராட்சிக்கு சொந்தமான 20.36 ஏக்கர் நிலத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு தனியார் நில அளவையரை கொண்டு நில அளவீடு செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.80,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் கோரி விலைப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும், செலவினத்தை பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.35/2023/இ1

**தீர்மான எண். 338 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் எலந்தக்குட்டை கிராமத்தில் நகராட்சிக்கு சொந்தமான 20.36 ஏக்கர் நிலத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிக்கு தனியார் நில அளவையரை கொண்டு நில அளவீடு செய்வதற்கு 07.12.2023ம் தேதி வியாழக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ வேலன் லேண்ட் சர்வேயிங்<br>23A, K.M.காம்பளக்ஸ், துணை சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் அருகில், அவுல் பூந்துறை, ஈரோடு–638 115. | ரூ. 71,500/– |
| 2 | ARK ஸ்டஸ்சுரல் கன்சல்டன்ட்,<br>2சி, மயிலடி, ஞானிபாளையம் அஞ்சல்,<br>ஈரோடு–6380112 | ரூ. 75,400/– |
| 3 | விஷ்சாகா அசோசியேட்ஸ்,<br>2, மயிலடி, ஞானிபாளையம் அஞ்சல்,<br>ஈரோடு–6380112 | ரூ. 80,000/– |

அலுவலக குறிப்பு

மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ வேலன் லேண்ட் சர்வேயிங், ஈரோடு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.

கோப்பு எண்.35/2023/இ1

**தீர்மான எண். 339 நாள். 28.12.2023**

ஏற்கப்பட்டது

**<u>பொருள் எண்.19</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.119731/2023/CFC/1 நாள்.17.07.2023 செயல்முறையின் படி, 15வது நிதிக்குழு சுகாதார மானியம் 2023–24 ன் கீழ் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 22.12.2023 – ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **15வது நிதிக்குழு சுகாதார மானியம் (Urban Primary Health Centre) 2023-24**<br>வெடியரசம்பாளையம் சாலை ஜீவா செட் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி | 12000000/- | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ்,<br>97A, ஊஞ்சப்பாளையம்,<br>பூதப்பாடி, பவானி. | 0.03% குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன்<br>5–6/327, கே.எஸ் நகர்,<br>பள்ளிபாளையம் | 3.18% கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், பவானி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1094/2023/இ1

**தீர்மான எண். 340 நாள். 28.12.2023**

ஏற்கப்பட்டது.

**<u>பொருள் எண்.20</u>**

பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் TN 34 Y 4624 மினி ஆட்டோ வாகனத்திற்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது சென்ற ஆண்டுக்கு செலுத்தப்பட்ட காப்பீட்டுக்கான காலக்கெடு வருகின்ற **02.01.2024–ந்** தேதியுடன் முடிவடைகின்றது. எனவே,வரும் காலங்களில் வாகனத்தை தொடர்ந்து இயக்குவதற்கு உரிய காப்பீட்டுத் தொகையான ரூ.**19225/–ஐ** செலுத்துமாறு M/S. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையான ரூ.**19225/–ஐ** நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார வாகனம் எண். TN 34 Y 4624 மினி ஆட்டோ வாகனத்திற்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தாகையான ரூ.**19225/–ஐ** M/S. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு, நகற்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்ற அனுமதிக்கலாம்

கோப்பு எண்.2061/2023/**எச்1**

**தீர்மான எண். 341 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.21</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு **15**வது நிதிக்குழு சுகாதார மானியம் **2023–24**ன் கீழ் வெடியரசம்பாளையம் சாலை ஜீவா செட் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் (Urban Primary Health Center) கட்டும் பணிக்கு மாநில அளவில் செய்தி மலரில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் **25.11.2023** அன்று adwave அட்வடைசிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் வாயிலாக விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, விளம்பர செய்ததற்காக adwave அட்வடைசிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ரூ.**90,563/–ஐ** வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**1094/2023/இ1**

**தீர்மான எண். 342 நாள். 28.12.2023**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) மோ.செல்வராஜ்,**<br>**தலைவர்,**<br>**பள்ளிபாளையம் நகராட்சி,**<br>**நாமக்கல் மாவட்டம்.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**<br>**பள்ளிபாளையம் நகராட்சி,**<br>**நாமக்கல் மாவட்டம்.**